Industrial Research—and that the hon. Member Thiru Rama Arangannal also had not been invited. Subsequently we hear reports that thef were invited and that there was an attempt to contact the Personal Assistant to the Chief Minister and see that the Chief Minister was also persuaded to come to the function. Is the informaion given by he Chief Minister correct or that given by the CSIR correct? Will the Hon. Chief Minister tell us which is the exact position with regard to the clarification that he had made while the hon. Member Thiru Arangannal was speaking.

Mr. SPEAKER : It is not a point of order.

Dr. H. V. HANDE : My point of order is this. The matter was discussed in the House. There is a sort of provision for us to elicit information in relation to the business before tse House. The Hon. Chief Minister is not going to reply immediately. He will be giving his reply a little later. A point of order may be raised in relation to the business before the House. I request the Hon. Chief Minister to make a statement under Rule 82. That is my point.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நண்பர் ஹாண்டே அவர்கள் எடுத்துக்காட்டியது போல, என்னை நேரிடையாகவோ அல்லது வேறு வழியிலோ சந்தித்து, அந்த விழாவிலே கலந்துகொள்ள வேண்டும் என்று யாரும் கேட்கவில்லை. அவர்கள் கூறியது போல, ஒரு வேளை என் தனிச் செயலாளரைச் சந்தித்திருக்கக் கூடும். அதைப் பற்றி இனிமேல்தான் நான் விசாரிக்க வேண்டும். அப்படி விசாரிப்பது இருக்கட்டும். ஒரு நாள் என்னைக் காண முடியாவிட்டாலும், மறு நாள் கண்டிருக்கலாம். உடல் நலம் சரியில்லாமல் இருந்தாலும், மத்திய அமைச்சர் ஒருவர், மாநில அரசால் கொடுக்கப்பட்ட ஒரு இடத்தில் ஒரு ஆராய்ச்சி நிலையத்தை தொடங்கி வைக்கும்போது, முதல் அமைச்சர் இல்லாவிட்டாலும், அடுத்து இருக்கும் மற்ற அமைச்சர்கள் யாரையும் அழைக்கவில்லை. அப்படி அழைக்க முயற்சி எடுத்ததாகவும் தெரியவில்லை. சென்னையிலேயே உள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரையும் அழைக்கவில்லை. இதைத்தான் நான் எடுத்துக் காட்டினேன்.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மதுரைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக்கு ஓர் அறிவிப்பு. மதுரைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவில் (Senate) இப்பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு. என். எஸ். வி. சித்தன், (2) திரு. பி. கே. மூக்கையா தேவர், (3) திரு. அ. லெ. சுப்பிரமணியம் ஆகிய மூவரும் இப்பேரவையின் உறுப்பினர்களாக இல்லாத காரணத்தால், பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவில் 22—8—1972 வரை நிரப்பப்பட வேண்டிய மூன்று

இடங்களுக்கு தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மதுரை பல்கலைக்கழகம் கோரியுள்ளது. பல்கலைக்கழகத்தின் விதி முறைப்படி பகுதிவாரி அடிப்படையில் (Proportional representation) இத்தேர்வு நடைபெறுவதில்லை.

எனவே, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 26—6—1971 சனிக் கிழமை காலை 11 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 28—6—1971 திங்கட்கிழமை காலை 11 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 29—6—1971 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

வெற்று நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை, இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது மூன்றுக்கு மேற்படு மாயின் 1—7—1971 வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை, கோட்டையில் இருக்கும் உறுப் பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

1971-72-ம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவதாம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று மொத்தம் 27 உறுப் பினர்கள் இந்த விவாதத்தில் பங்கு கொள்ள பெயர் கொடுத்திருக் கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். மொத்தம் இருப்பது 200 நிமிஷங்கள்தான். ஒவ்வொரு வருக்கும் 10 நிமிஷம் வேண்டும் என்றாலும் அவையின் நேரத்தை ஒரு மணி நேரம் அதிகமாக்க வேண்டும். ஆகவே, எல்லோரும் சுருக்கமாகப் பேசி 7, 8 நிமிஷங்களுக்குள்ளாகவே தங்கள் உரையை முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, முதலிலே திரு. அழகர்சாமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

* **திரு. சோ. அழகர்சாமி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக் களைச் சொல்ல முன் வருகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையை நமது முதலமைச்சர் சமர்பித்தபோது, சமதர்ம சமுதாயத்தை நிறுவ, ஏற்றத்தாழ்வு அற்ற சமுதாயத்தை அமைக்க இதைச் சமர்ப்பிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதே நோத்தில், கிராமப் பகுதியில் வசிக்கும் கோடிக்கணக்கான விவசாய மக்கள் நல்வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டுமானால் இதற்கு முன்னால் உள்ள நிலச் சீர்திருத்தச் சட்டங்களை எல்லாம் ஒருங் கிணைந்த ஒரு நிலச்சீர்திருத்தச் சட்டமாகக் கொண்டு வந்து, உச்ச வரம்பை ஒரு குடும்பத்திற்கு 15 எக்கர் என்ற அளவில் நிர்ண யித்து அதை நடைமுறையில் வகைப்படுத்த நடவடிக்கை எடுக்கப் படவேண்டும். அதுபற்றி இந்த அறிக்கையில் சரியான விவரம் இல்லை.